ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ.120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 18 | நவம்பர் 2012 | கானம் : 4

Delivered by India Post www.indiapost.gov.in

Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

| | | |
|---|---|---|
| வேணு : 18 | நவம்பர் 2012 | கானம் : 4 |



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**


செப்டம்பர் 29, 2012 – கோவிந்தபுரம் ஞானகயா க்ஷேத்ரம் மஹா கும்பாபிஷேக வைபவத்தில் – பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீகிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களுடன் ஸ்ரீஸ்வாமிஜி



ஸ்ரீ:

# மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன்

## ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின் ஸன்னிதியுடன் சிங்கப்பூரில் நாமத்வார் திறப்பு



நவம்பர் 8, 2012 வியாழக்கிழமை மாலை 6.30 P.M.

6.35 PM – வரவேற்புரை– திருமதி. லில்லி நடராஜன், நாமத்வார் செகரெட்டரி

6.45 PM – **தலைமை உரை –**
**ஸ்ரீ பாலசுப்ரமணியன்**

7.00PM – **குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தல்**
**ஸ்ரீஜெயச்சந்திரன்** Non Executive Chairman OLAM International
& **ஸ்ரீமதி ஹரிலஷ்மி ஜெயச்சந்திரன்**

7.15PM – **நாமத்வாரை திறந்து வைத்து சிறப்புரை**
**Dr.ஆ.பாக்யநாதன்ஜி,**
**மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி** அவர்களின் அந்தரங்க செயலாளர்

7.30PM – **சிறப்புரை – ஸ்ரீஜெயச்சந்திரன்**

7.45PM – **ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜியின் பதிவு செய்யப்பட்ட அனுக்ரஹ பாஷணம்**

9.00 PM– நன்றியுரை – ஸ்ரீஸ்ரீதரன் – நாமத்வார் பொருளாளர்

at 448 Serangoon Road.
# 02-01, Opp. to
Sri Srinivasa Perumal temple
Singapore




Nov 9 & 10, 2012 "மதுர உத்ஸவம்"
மஹாமந்திரத்தின் பெருமை By Dr.பாக்யநாதன்ஜி
இடம்: சிவன் கோவில், கெய்லாங், சிங்கப்பூர்

26th Oct to 30th Oct 2012
கலிதர்ம உந்தியார் – உரை
டாக்டர் பாக்யநாதன்ஜி
இடம்: நாமத்வார், மலேசியா

Nov 2, 2012 – Joy of Sharing Initiative
பள்ளி சீருடை மற்றும் காலணி வழங்குதல்
– புசோங், மலேசியா.

ஹரே ராம
ஹரே ராம
ராம ராம
ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண
ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே



அக்டோபர் 16– 24, 2012 – மதுரபுரி ஆஸ்ரமத்தில் நவராத்திரி உத்ஸவம்

மலேசியாவில் புதிய அஞ்சல்தலை
வெளியீடு -பார்க்க பக்கம் 10






நமது ஸ்ரீசாந்திபனி குருகுல பாடசாலையில் கிரமாந்தம் அத்யயனம் செய்து காஞ்சிபுரம் வேதரக்ஷண நிதி டிரஸ்டின் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற வித்யார்த்திகளுடன் ஸ்ரீஸ்வாமிஜி



அக்டோபர் 13, 2012 -
புரட்டாசி சனிக்கிழமை -
மஹாரண்யம் ஸ்ரீகல்யாண
ஸ்ரீனிவாச பெருமாள்
கோவிலில்
அன்னகூடோத்ஸவம்,
நகரசங்கீர்த்தனம்







அக்டோபர் 14-22, 2012 - விருதுநகரில்
ஸ்ரீமத்ராமாயண உபன்யாசம் - முரளிஜி




அக்டோபர் 6, 2012 - ஸ்ரீவரதராஜபெருமாள் கோவிலில் சத்சங்கம் - துறையூர்
அருகே செங்காட்டுப்பட்டி - முரளிஜி

செப்டம்பர் 23, 2012 - மதுரபுரி ஆஸ்ரமத்தில் வருடாந்திர கூட்டம் -
Annual General Body Meeting (see page 31)



அக்டோபர் 8 & 9, 2012 - மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - திருச்சி சிவானந்தா பாலாலய பள்ளி - முரளிஜி





அக்டோபர்
4 – 7, 2012
அட்லாண்டா
அமெரிக்கா –
மஹாமந்திர
கூட்டு
பிரார்த்தனை –
ராமானுஜம்ஜி

அக்டோபர்
12, 2012
அமெரிக்கா –
ஹிந்து சென்டர்
ஆஃப்
விர்ஜீனியாவில்
மதுர
உத்ஸவத்தில்
ராமானுஜம்ஜி
மற்றும்
அன்பர்கள்





அக்டோபர்
13, 2012
அமெரிக்கா –
நியூ ஜெர்ஸி
குருவாயூரப்பன்
கோவிலில்
பாகவத தர்மம்
உபன்யாசம் –
ராமானுஜம்ஜி

அக்டோபர் 21, 2012 - New Hampshire Hindu Temple in Nashua
- நாம மஹிமை - ராமானுஜம்ஜி உபன்யாசம்



அக்டோபர் 20&21 - அமெரிக்கா - Quincy, MA, Boston இல் மதுர உத்ஸவம் -
கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள்




October 11, 2012 - Gayton Library, Tuckahoe, Virginia, USA
Transformational Leadership (workshop) by Ramanujamji



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:18 நவம்பர் 2012 கானம்:4

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

நம்பிக்கையுடனும், மஹான்களின் சத்சங்கத்துடனும் இறைவனின் நாமத்தை சொல்லி வாருங்கள். நாமம் மனதை சாந்தமாக்கி, மிகப்பெரிய ஆனந்தமும், அமைதியும் தரவல்லது என்று, ஒரே ஒருமுறை அனுபவம் வந்த பின், நாமத்தின்பால் மனதிற்கு விவரிக்க முடியாத ஈர்ப்பு ஏற்படும். அதன்பின் நாமத்தை பிரிய யாருக்கு மனம் வரும்? இதயத்தில் முழு ஈடுபாட்டுடன் நாமகீர்த்தனம் செய்து வந்தால், அது வாழ்வின் லட்சியத்தில் கொண்டு சேர்க்கும்.

**–ஸ்வாமி பப்பா ராம்தாஸ்**

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹநீயர் – 200 | 3 |
| மதுர யாத்திரை | 7 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 |
| பாகவத பழம் – 32 | 13 |
| ஸ்ரீசுதர்சன சதகம் | 17 |
| ஆலய தரிசனம் | 33 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 36 |
| ப்ருந்தாவன கண்ணன் | 42 |
| மாலே மணிவண்ணா | 44 |
| அப்பாலுக்கு அப்பால் | 46 |

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : ஸ்ரீ ரஞ்ஜனி  தாளம் : ஆதி

பல்லவி

இத்துனை தூரம் வந்ததே பெரும்பாடு – என்
கண்ணா, உனை நோக்கி நான்

(இத்துனை ...)

அனுபல்லவி

மாயை வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு – என்
காயம் மனதெல்லாம் தளர்ந்தே போச்சு!

(இத்துனை ...)

சரணம்

ஒரு கணத்தில் கை கொடுத்து கரை ஏற்றுவாய்
ஓரேழுத்துடைய பெயருடையோனே
ஒருவனாய் ஆலிலையில் மிஞ்சி இருந்தாய்
நன்று! நன்று! என்று நான் சொல்லும்படி இன்றே செய்வாய்!

(இத்துனை ...)

முன் அட்டை – ஸ்ரீஸ்வாமிஜி மதுரபுரி ஆஸ்ரம கன்யாகுமரி ஜய ஹனுமான் சன்னிதியில்
பின் அட்டை – சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் அவதார உத்ஸவம்



# மதுரமான மஹனீயர் - 200

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

உலகெங்கிலும் அன்பர்கள் பலர், குருநாதருக்கு மிகவும் பிடித்த மஹாமந்திர கீர்த்தனம் செய்து கொண்டும், பலருக்கு அதன் மேன்மையை எடுத்து சொல்லியும் வருகின்றனர். தமிழ்நாட்டில் அப்படி சேலத்திலும், அதனை சுற்றி உள்ள ஊர்களிலும் ஸ்ரீஸ்வாமிஜியிடம் தங்களை ஈடுபடுத்தி கொண்ட அன்பர்கள் பலர் இருக்கிறார்கள். ஸ்ரீஸ்வாமிஜியின் அருளால் ஆட்கொள்ளப்பட்ட அவர்கள், மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து, வாழ்வில் வியத்தகு மாற்றத்தை கண்டவர்கள். இதற்கு அவ்வன்பர் வாழ்வே பிரமாணம். சேலம் திரு.வெங்கட்ராம், திருமதி.ஷீலா-வெங்கட்ராம் தம்பதிகள் குடும்பமும் அவற்றில் ஒன்று. குருநாதர் தரிசனத்திற்கு பின், தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையும், நாமானுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்கள் இத்தம்பதிகள்.

தொலைக்காட்சியில் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரைகளை கேட்டு ஈர்க்கப்பட்டவர் ஏராளம் அல்லவா! திருமதி.ஷீலாவும் 2002வாக்கில் தினமும் குருநாதரின் அருளுரையை கேட்டு கொண்டிருப்பார். அப்பொழுது தொலைக்காட்சியில் ஸ்ரீஸ்வாமிஜி தோன்றுகையில் "இவர்தான் எனது குருநாதர்" என்று திரு.வெங்கட்ராம் தன்னையறியாமல் சொல்வது வழக்கமாம். குருவருள், அதை பின்னாளில் உண்மையாக்கி விட்டது!

ஜனவரி 26, 2004 வசந்த பஞ்சமி, ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாசபெருமாளின் பிரதிஷ்டாதினம். அன்று, சேலத்து அன்பர்கள் குழுவோடு, மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு வந்து இத்தம்பதிகள், ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் பெற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம் அன்று கிடைத்ததில் இருந்தே, இருவர் மனதிலும் ஒரு இனம்புரியாத ஆனந்தம் இருந்து வந்தது. அதன்பிறகு அடிக்கடி சேலத்திலிருந்து வந்து, ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்து விட்டு செல்வர்.

ஸ்ரீஸ்வாமிஜி 2007 ஜனவரி 1இல் சென்னை காமராஜர் அரங்கத்தில், முதன்முறையாக மாபெரும் அளவில், ஒரு பெரிய மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தியது அனைவருக்கும் நினைவிருக்கும். இதில் கலந்து கொண்டதிலிருந்து, இவ்விருவருக்கும் மனதில் ஒரு ஏக்கம் குடி கொண்டது. "நமது ஊருக்கும் குருநாதர் விஜயம் செய்யமாட்டாரா?" என்பதுதான் அது. குருநாதரை வரவழைத்து பலருக்கும் நன்மையை செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டனர். தமது உள்ளக்கிடக்கையை குருநாதரிடம் பிரார்த்தித்து தெரிவித்து கொண்டார். 2007இல் திடீரென ஒருநாள், குருநாதர் சென்னைக்கு வெங்கட்ராமை வரவழைத்து, "சேலத்தில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று ஸ்ரீஸ்வாமிஜி அருளினார்கள். உடனே, மனதில் ஆனந்தம் இருவருக்கும் பொங்கியது. ஆனால், இப்படி பெரிய சத்சங்கத்தை நம்மால் நடத்த இயலுமா என்று திரு.வெங்கட்ராமிற்கு தோன்றியது. இருப்பினும் "எல்லாம் குருநாதர் நடத்தி கொள்ள போகிறார். நாம் கருவிகள்தானே" என்று சமாதானமானார். குருநாதரும் "நீங்களும் அன்பர்களும் நடத்துவீர்கள்" என்று சொல்லி தேதியும் குறித்து, ஆசிகள் கொடுத்து அனுப்பி விட்டார்.

சந்தோஷமுடன் சேலம் திரும்பி வந்து, அன்பர்களிடம் இவ்விஷயத்தை பகிர்ந்து கொண்டனர். எல்லோரும் கூட்டாக சேர்ந்து வெங்கட்ராம் தலைமையில், மிக அழகாக தெய்வீகம் கல்யாண மண்டபத்தில், மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை ஏற்பாடு செய்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் ஆயிரத்திற்கும் மேலானோர் பங்கேற்க, சேலத்தில் முதன்முறையாக இருநாட்களும் மஹாமந்திர மழைதான்!.

குருநாதர் வெங்கட்ராமிடம், நாமத்வாருக்காக ஒரு நல்ல இடம் பார்க்க வேண்டும் என சொல்லி கொண்டே இருந்தார்கள். வெங்கட்ராம் பல இடம் தேடியும் மனதிற்கு பிடித்ததாய் ஒன்றும் அமையவில்லை. அவர், நம் சத்சங்கத்தை சேர்ந்த ஸ்ரீசேஷாத்திரி அவர்களிடம், தனக்கு சொந்தமாய் அருகில் இருந்த வீடு பற்றி சொல்லி, அதை பயன்படுத்தலாமா என்று கேட்டார். இது உடனே, ஸ்ரீஸ்வாமிஜிக்கு தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி

அவர்களும் வீட்டை பார்த்து விட்டு ஒப்புதல் அளித்தார். குருநாதர் அனுக்ரஹத்துடனும், நாமகோஷத்துடனும், நாமத்வார், மே2ஆம் தேதி 2007 முதல், சேலம் காந்தி ரோடில் இயங்க ஆரம்பித்தது. நாமத்வார் வந்ததிலிருந்து, தமக்கு அது பெரும் பாதுகாப்பு தந்து வருவதை உணர்ந்தார் வெங்கட்ராம்.

ஸத்குருவின் கடைக்கண் பார்வை பட்ட ஒருவருக்கு, அதன்பின், வாழ்க்கையை பற்றிய ஒரு பார்வை மாறி விடுகிறது. கஷ்டம் விலகுவதற்காக ஒருவர் ஜோதிடம், பரிகாரம் போன்ற விஷயங்களை நாடுவது சகஜம். ஆனால் ஸத்குருவின் தரிசனம் பெற்ற பின், குருவின் தரிசனமும், அவர் உபதேசத்தின்படி வாழ்தலுமே, அனைத்துக்கும் தீர்வு என்பதை ஒருவர் உணர்ந்து விடுகின்றார். இத்தகைய மாற்றங்கள் அனைவருக்கும் பொதுவானது. இம்மாற்றத்தை கொஞ்சம் கொஞ்சமாக குருவருள் நிகழ்த்தி விடுகிறது. இத்தம்பதிகளும் குருநாதரின் தரிசனத்திற்கு பின், எந்தவிதமான கஷ்டத்திற்கும், ஜோதிடம், பரிகாரம், கோவில், குளம் என்று நாடவில்லை. மஹாமந்திரமும், குருநாதர் தரிசனமும்தான், சகலத்திற்குமான உபாயமுமாய் இத்தம்பதிகளுக்கு ஆயிற்று.

திரு.வெங்கட்ராம் பல வருடங்களாக ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். அது அவரது முக்கிய தொழில். 2009இல் அவர் குடும்ப பாகப்பிரிவினையில், ஜவுளி வியாபாரம் அவர் கைவிட்டு போனது. தம்பதிகளுக்கு வருத்தம். செய்வதறியாது தவித்தனர். குருநாதர்தான் சகலத்திற்கும் நிவாரணம் தரும் மஹாமந்திரம் என்பாரே! அதனால் செய்ய இயலாதது எதுவும் இல்லை என்பாரே! இதை நன்கு அறிந்த வெங்கட்ராம், தனக்கு வந்த கஷ்டம் நீங்க, நாமத்தை விடாமல் சொல்லி, பிரார்த்தனை செய்து வந்தார். நடுவில் மதுரபுரி ஆஸ்ரம கோகுலாஷ்டமி உத்ஸவத்தில் தம்பதிகள் வந்து கலந்து கொண்டனர். சேலம் திரும்பிய மூன்றே நாட்களில், வெங்கட்ராமின் செல்பேசியில் ஒரு பெரிய வியாபாரத்திற்கான டீலர் அழைப்பு வந்தது. அது பிடித்திருந்ததால், குருநாதரின் அருளுடன் அதை, தற்சமயம், தமக்கு மற்றும் தம் மகன்களுக்குமாகவும், ஏற்று நடத்துகிறார். சத்சங்கத்தில் இருப்போரை கஷ்டம் பாதிப்பது இல்லை!

திருவண்ணாமலை ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில் செப்டம்பர் 28, 2009 அன்று குருநாதரின் உபன்யாசம் ஏற்பாடு ஆகி இருந்தது. அன்று ஷீலா வெங்கட்ராம் தம்பதிகளுக்கு திருமண தினம். குரு கிடைத்த பின், அவர் தரிசனம்தான் ஒருவருக்கு மிக பெரிய மகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா! யாவரும் தம் மகிழ்ச்சியை குருவிடம்தானே பகிர்ந்து கொள்வர்! அப்படியே அண்ணாமலை சென்று குருநாதரின் தரிசனம் பெற வேண்டும் என்று இத்தம்பதிகளும் ஆசைப்பட்டனர். எதிர்பாராமல் திருமதி.ஷீலா முதுகில் அடிபட்டு விட்டது. நடக்க முடியவில்லை. அவருக்கு வருத்தத்திற்கு மேல் வருத்தம். ஒரே அழுகை அழுகையாக வந்தது. குருநாதரின் திருவுருவம் முன் உருக்கமுடன் பிரார்த்தித்தார். சில நாள்கழித்து, திடீரென்று சேலத்திற்கே, குருநாதர் வந்து விட்டார்! திருமதி.ஷீலா பெருமகிழ்ச்சி உற்றார். குருநாதர் சேலம் வரவேண்டிய விசேஷ காரணமில்லை எனினும், அவர் திருவுருவம் முன், உருக்கமுடன் வேண்டியது, அவருக்கு எப்படி தெரியாமலிருக்கும்!

13வருடங்களாக மனதை வாட்டிய வீடு சம்பந்தமான ஒரு வழக்கு, குருவருளால் மாயமாய் ஒரே மாதத்தில் சாதகமானது, வைகுண்ட ஏகாதசி அன்று க்ருஹத்தில் அகண்டமாய் குருநாதர் ஆக்ஞைப்படி மஹாமந்திரகீர்த்தனம் வைத்து கொண்டது, பழனிக்கு செல்கையில் ஒரு பெரிய விபத்தில் இருந்து தப்பியது, மகனுக்கு ஏற்பட்ட விபத்திற்கு பின் குருவருள் துணை நின்றது - என பல நாமானுபவங்களை குருவருள் கூட்டி வைத்ததை நினைத்து இருவரும் அகமகிழ்கின்றனர்.

தம் வாழ்வில் வரும் பல கஷ்டங்களை குருநாதரிடம் பன்முறை சொல்லி இருக்கிறார் வெங்கட்ராம். மறுமுறை குருநாதரை தரிசனம் செய்கையில், அவருக்கே மறந்து போகும் அளவிற்கு, அந்த கஷ்டங்கள் எல்லாம் காணாமல் போய் விடும். ஆனால் குருநாதரோ, அதை ஞாபகம் வைத்து கேட்பார்கள். பன்முறை இப்படி நடந்து இருக்கிறது என்கிறார் வெங்கட்ராம். இப்படி பலவிதத்திலும் தங்களை அருள்வலையில் இழுத்து, காத்து வரும் குருநாதரிடம், ஏக மனதாய் பக்தியுடன் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றனர் இத்தம்பதிகள்.

# விருத்திம் கர்நாடகே கதா

(10)

–ராமானுஜம்ஜி

அம்பு தீர்த்தத்தில் தெய்வங்களை கோவிலுக்குள் கொண்டு வைக்கையில், மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இடமே இருட்டாகி விட்டது. தரை கொஞ்சம் ஈரமாக இருந்ததாலும், ஒரே இருட்டாக இருந்ததாலும், நமது குருநாதரை கண்ட பரபரப்பாலும், அர்ச்சகரின் மகன் கொஞ்சம் வழுக்கி விழுந்தார். அவர் விழும் சத்தம் கேட்டவுடன், குருநாதர் அங்கேயே நின்று விட்டார். கருணை ததும்ப, எங்களில் ஒருவரை அனுப்பி, அவர் எப்படி இருக்கிறார் என்று பார்த்து வர சொன்னார். அவருக்கு ஒன்றும் ஆகவில்லை என்று தெரிந்த பின்தான் "ராதே ராதே" என்று சொல்லி கொண்டு காரை வந்தடைந்தோம்.

வெகுநாளைக்கு பிறகு, திரும்ப ஆரம்பிக்கப்பட்ட அபிஷேகம் முடிந்த உடன், இப்படி ஆகிவிட்டதே என்று வினவினோம். அதற்கு நமது குருநாதர் மிக சுருக்கமாக, "ஆமாம். இது ஒரு தற்செயலாக நடந்த நிகழ்வு அல்ல" என்று மட்டும் சொன்னார். குருநாதர் முன்பு ஒருசமயம், ஒரு அன்பரின் கேள்விக்கு, கொடுத்த அருண்மொழி நினைவுக்கு வந்தது. ஒரு கோவிலில் விட்டு போன பழைய சம்பிரதாயமான பூஜையை மீண்டும் தொடர்கையில், பூஜையை தடை செய்த சக்திகள் தடைகளை மீண்டும் உண்டு பண்ணும் என்று சொன்னது அப்பொழுதுதான் புரிந்தது.

குருநாதரே அங்கு அபிஷேகம் செய்து, தடைகளை நீக்கும் விக்னேஸ்வர பூஜைக்கு இருந்த தடைகளை நீக்கியுள்ளார். அர்ச்சகருக்கு ஏற்பட்ட காயம் சிறிது என்றாலும், அதற்கு ஒரு சிறு சிகிச்சை ஏற்பாடு செய்த பின்னரே, அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் ஸ்ரீஸ்வாமிஜி. அர்ச்சகருக்கு ஒரு தெய்வ அனுக்ரஹத்தை, மந்திரோபதேசம் மூலம் கொடுத்து எதிர்காலத்தில் வேறு எந்த பாதிப்பும் ஏற்படாதவாறு தடுத்தும்

விட்டார். மஹான்களின் கருணையைத்தான் என்னவென்று சொல்வது!

அங்கிருந்து கிளம்புகையில், ஸ்ரீஸ்வாமிஜி யதேச்சையாக "இன்று என்ன திதி?" என்று வினவினார்கள். அப்பொழுதுதான் அன்று கணபதிக்கு உகந்த சதுர்த்தி என்று தெரிந்தது. அன்று முழுவதும் கணபதியை பற்றித்தான் ஸ்ரீஸ்வாமிஜி பேசி கொண்டே இருந்திருக்கிறார்கள் என்று, எங்களுக்கு அப்பொழுதுதான் புரிந்தது. ஸ்ரீஸ்வாமிஜியும், "கணபதியின் ஸ்மரணம் நமக்கு நல்ல நாளில்தான் ஏற்படுகிறது" என்று அழகாக சொல்லி சிரித்தார்கள். கொஞ்சமும் புரிந்து கொள்ள முடியாது எனினும், மஹான்களின் ஹிருதயமானது, தெய்வசங்கல்பத்தின்படி எப்படி செயல்படுகிறது என்பதை அன்று கொஞ்சம் நேரில் கண்டோம்.

அன்று டிசம்பர் 28 ஆனபடியால், ஜனவரி ஒன்றாம் தேதி 2012 மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை கோயம்புத்தூரில் ஏற்பாடு ஆகி இருந்ததை, நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்து சிந்தனையில் மூழ்கினோம். முதன்முதலில் எப்படி தூத்துக்குடியில் 2006இல் ஸ்ரீஸ்வாமிஜி திரு.கதிரேசன் அவர்களின் குடும்பத்தாரிடம் திடீரென, "மஹாமந்திரத்தை மக்களின் நன்மைக்காக அவர்களிடம் எடுத்து செல்ல வேண்டும். ஒரு கூட்டு பிரார்த்தனை செய்தால் என்ன?" என்று கேட்டார்கள். நவம்பர் 17இல் இப்படி அருளிய ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், நவம்பர் 19ஆம் தேதியே ஒரு கூட்டு பிரார்த்தனையை நடத்த உத்தேசித்தார்கள். ஒரு சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள முனிசிபல் ஹாலில்தான், இது முதன்முதலாக நடந்தது. தூத்துக்குடி அன்பர்கள், பம்பரம் போல் வேலை செய்தார்கள். பிரார்த்தனைக்கு வந்த அன்பர்களுக்கு எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜி தம் திருக்கரங்களாலேயே பிரசாதம் வழங்கினார்கள்.

அப்படி ஆரம்பித்த கூட்டு பிரார்த்தனை, தொடர்ந்து வந்த 2007 ஜனவரி 1ஆம் தேதி, முதன்முறையாக மிகப்பெரிய அளவில், சென்னை காமராஜர் ஹாலில், 5000அன்பர்கள் சூழ நடைபெற்றது. அப்படியே எத்தனை எத்தனை மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை எத்தனை எத்தனை இடங்களில் ஸ்ரீஸ்வாமிஜி

நடத்தி விட்டார்கள்! ஆம்பூர், அம்பை, கோவில்பட்டி, திருக்கோஷ்டியூர், தஞ்சை, குடியாத்தம், சிவகாசி, பெரியகுளம், ஷோளிங்கர், பெரியகுளம், தேனி, சேலம், திருச்சி, மதுரை இப்படி எந்த ஊரிலிருந்து, மற்ற ஊருக்கு சென்றாலும், இடையில் கிராமங்களில் எல்லாம் கூட, இங்கு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடந்துள்ளது என்று நினைவுக்கு வருமாறு இருக்கிறதே! அன்பர்களும் ஆங்காங்கே, ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுடன் இதை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். அப்படியே இது மெல்ல மெல்ல, உலக அளவில் அல்லவா பரவி விட்டது. 2012 ஜனவரி ஒன்றாம் தேதி, கோயமுத்தூருக்கான சமயம் என்று நினைத்தவாறு இருந்தோம்.

உலகமக்களிடம் இந்த மஹாமந்திரம் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளால், எத்தகைய நன்மை புரிந்திருக்கிறது என்று நினைக்கையில், "உலக மக்கள் உய்ய ஓர் வழி கண்டாரே, அவல நிலை போக்கும் கீர்த்தனம் பாடீரே" என்ற ஸ்ரீஸ்வாமிஜியின் மஹாமந்திர கீர்த்தனத்தை எப்படி மறக்க முடியும்?

இந்த நிலையில் மறுநாள் 29ஆம் தேதி, தமிழகம் திரும்புவோம் என்றுதான் நினைத்து கொண்டிருந்தோம். காலையில் ஸ்ரீஸ்வாமிஜியை நமஸ்கரிக்க சென்றோம். ஸ்ரீஸ்வாமிஜி உடனே, "உடுப்பி சென்றிருக்கிறாயா?" என்று வினவினார். எனக்கு மனதில் ஒரு சின்ன பரவசம்; ஏனெனில் ஸ்ரீஸ்வாமிஜியை எப்படி உடுப்பி கிருஷ்ணன் வரவழைத்து தரிசனம் தந்துள்ளான் என்றெல்லாம், ஸ்ரீஸ்வாமிஜியின் வாயிலாகவே கேட்கும் பாக்யம் பெற்று இருக்கிறேன். அந்த நினைவுகள் மனதில் கிடுகிடுவென வந்தது. உடுப்பி போகப்போகிறோமோ என்ற ஆசை மனதில் துளிர்விட்டவாறிருக்க, "உடுப்பி சென்றது இல்லை" என்று ஸ்ரீஸ்வாமிஜிக்கு பதில் உரைத்தேன். அவர் ஒருகணம் தாமதித்தார். அது ஒரு யுகம் கழிவது போலிருந்தது.

அதன்பின், "வா; கிருஷ்ணன் கூப்பிடுகிறான். பெங்களூருக்கு உடுப்பி வழியாக செல்வோம்" என்றார். அதை கேட்டவுடன், எங்கள் முகங்கள், மனதில் எழுந்த சந்தோஷத்தை அப்படியே வெளிப்படுத்தின.

(மதுர யாத்திரை தொடரும்)

ஆயிரம்பேர் கூடி நாமசங்கீர்த்தனம், செய்து கூட்டுப்ப்ரார்த்தனைகள் ஏன் நிகழ்த்த வேண்டும்? ஏகாதச ருத்ரம் நடத்தினால், 11 பேர் சேர்ந்து ஒரு முறை ஓதுவது வழக்கம். அது பதினோரு முறை ருத்ரம் ஓதியதாக கருதப்படும். அதே போல், பாகவதம் ஸதக்ரது நடத்தினால், 108பாகவதர்கள் சேர்ந்து, ஒரு சப்தாஹம் செய்வது வழக்கம். அப்படி செய்தால் 108சப்தாஹம் செய்த பலன் கிடைக்கும். ஒருவர் உட்கார்ந்து கொண்டு 1000 நாமம் சொல்ல எவ்வளவு நேரம் ஆகும்? ஆனால், இப்படி 1000 பேர் கூடி செய்யும் நாமசங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டு, ஒரு நாமம் சொன்னாலே அது 1000 நாமம் சொன்ன பலனை கொடுக்கும்! அதனால்தான் நாமசங்கீர்த்தன கூட்டுப்ப்ரார்த்தனைகள் நிகழ்த்தப்படுகின்றன!

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## *மலேசியாவில் புதிய அஞ்சல்தலை வெளியீடு*

சென்ற வருடம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி, மலேசிய நாமத்வார் அன்பர்கள் நூதனமாக காது கேளாதோர் மற்றும் பேச இயலாதோரையும் மஹாமந்திரம் சென்றடைவதற்காக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவம் பதித்த மஹாமந்திர நோட்டுகளை அச்சிட்டது நினைவிருக்கலாம். அதுபோல இவ்வருடமும் ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி, மலேசிய நாமத்வார் செகரெட்டரி சுனிதாஜி மற்றும் அன்பர்களின் முயற்சியினால், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவம் பொறிக்கப்ப்ட்ட அழகிய அஞ்சல் தலை ஒன்று மலேசியாவில் வெளியிடப்பட்டுள்ளது. (பார்க்க பக்கம் 21) மலேசியாவில் அஞ்சல் நிர்வாக அனுமதியுடன் எந்த ஒரு அமைப்பும் தமக்கு பிடித்த அஞ்சல் தலையை வெளியிடலாம். இந்த அஞ்சல்தலையை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம், நவராத்திரி உத்ஸவத்தின் பொழுது மலேசிய அன்பர்கள் சமர்ப்பித்தனர்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: தெய்வீக வாழ்க்கையில் ஈடுபடுபவர்களில் சிலர் PSYCHOLOGICAL ஆக AFFECT ஆகின்றார்களே? அது ஏன்?

பதில்: உடலை வலுவாகவும், ஆரோக்யமாகவும் வைத்துக்கொள்ள பலர் Exercise செய்கின்றார்கள். அதையே அவர்கள் தவறாகவோ, அளவிற்கு அதிகமாகவோ செய்தால் சுளுக்கு, SPRAIN, DISC PROLAPSE போன்றவைகள் வந்து விடுகின்றது. ஆரோக்யத்திற்காக நாம் செய்த ஒரு முயற்சியே, விபரீதமாக முடிந்து விடுகின்றது. அறிவை வளர்த்து கொள்ள ஒரு ஆசிரியரிடம் சென்று பாடம் படிக்கின்றோம். அவரே தவறுதலாக சொல்லி கொடுத்தாலோ, அல்லது அவர் சொல்லி கொடுப்பதை, நாம் தவறுதலாக புரிந்து கொண்டாலோ, அந்த அறிவு ஆக்கத்தை உண்டாக்குவதை காட்டிலும் அழிவையே உண்டாக்கும்.

அதுபோலத்தான் இதுவும். தெய்வீக சாதனைகள் என்பது மனதை கொண்டு, நாம் செய்யும் பயிற்சி ஆகும். தன்னைத்தான் உணராத குருவை துணை கொண்டு பயிற்சி செய்தாலும், இத்தகைய விபரீதங்கள் ஏற்படும். தன்னைத்தான் உணராவிட்டாலும், சாஸ்திரங்களை நன்றாக தெரிந்து, அதன்படி செல்ல வேண்டும். அல்லது வழிகாட்ட வேண்டும். தனக்குத்தானே தோன்றிய வழிமுறைகளை, பிறருக்கு உபதேசம் செய்ய கூடாது. அப்படி செய்தால், அதை கேட்டு சாதனை செய்பவர்களுக்கு விபரீதம்தான் ஏற்படும்.

நல்ல குரு கிடைத்தும் அவர் சொல்வதை பின்பற்றாமல் நாம், "அவர் அப்படித்தான் சொல்வார், நான் இப்படித்தான் செய்வேன் என்றாலும், விபரீதம்தான் ஏற்படும்". தெய்வீக

வாழ்க்கையை பொறுத்தவரை, நீ தெய்வீக சாதனைகள் ஒன்றும் செய்ய வேண்டாம் என்று உத்தம குரு சொல்லி விட்டார் என்றால், அதுதான் உனக்கு, சிறந்த சாதனை.

மற்றும் சிலர், ஒரு மூர்த்தியையோ, படத்தையோ அல்லது குருவையோ இமை கொட்டாமல் முறைத்து பார்த்து கொண்டிருப்பார்கள். இப்படி பழக்கி கொண்டு விட்டால், இதை மாற்ற முடியாது. இது தியானம் ஆகாது. இதற்கு GAZING என்று பெயர். இப்படி GAZING செய்வது நம்மை மனதளவில் மிகவும் பலவீனமாக்கி விடும். PSYCHOLOGICAL PROBLEMS ஏற்படும். தியானம் என்பது ப்ரேமையுடன் கண்களை மூடிக்கொண்டு, ஹ்ருதயத்தில் பகவானையோ, குருவையோ தியானிப்பதே ஆகும். GAZING தியானம் ஆகாது. இது HYPNOTISM அல்லது MESMERISM மாதிரி ஆகி விடும்.

## வருடாந்திர கூட்டம் (Annual General Body Meeting)

கீழ்க்கண்ட அறக்கட்டளைகளின் வருடாந்திர கூட்டம் (Annual General Body Meeting) 23.9.2012 அன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அறக்கட்டளைகளின் அறங்காவலர்கள் கலந்து கொண்டனர். அறக்கட்டளைகளின் சென்ற வருட செயல்பாடுகள் குறித்து, விவரிக்கப்பட்டது. தணிக்கை செய்யப்பட்ட வருடாந்திர வரவு-செலவு கணக்கும், அறங்காவலர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

<u>அறக்கட்டளைகள் விவரம்:</u>

குருஜி ஸ்ரீமுரளீதர ஸ்வாமிகள் மிஷன்

ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட்

சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா

ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத பாடசாலா

குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்ட்

ஜய ஹனுமான் சேவா டிரஸ்ட்

ஜாய் ஆஃப் ஷேரிங் டிரஸ்ட்



# பாகவத பழம்

### பாகம் 2 – அத் 15

–ஸ்ரீஸ்வாமிஜி (32)

**அத்யாயம் 15**

துவாரகையில் இருந்து திரும்பிய அர்ஜுனன் கூறியதை கேட்ட தர்மபுத்திரர், பகவான் இல்லாத பூமியில் ஒரு கணம் கூட இருக்கக்கூடாது என்று முடிவு செய்தார்.

அவதார புருஷர்களான பாண்டவர்கள், தங்களுடைய பூலோக வாழ்க்கையை முடித்துக்கொள்ள எண்ணினார்கள். அதற்குமுன் செய்யவேண்டிய கடமையை சிந்தித்தார் தர்ம புத்திரர். அதன்படி பேரனான பரீக்ஷித்தை, அஸ்தினாபுரத்திற்கு ராஜாவாக பட்டாபிஷேகம் செய்தார். அநிருத்தனின் புதல்வனான வஜ்ரனை, மதுராவின் அதிபதியாக்கினார். குந்தி, பகவானை தியானித்து அவனை அடைந்தாள்.

தர்மபுத்திரர் கலியுகம் ஆரம்பித்ததை உணர்ந்தார். மரவுரி தரித்தார். ஆஹாரம் எடுத்துக் கொள்ளவில்லை. மௌனத்தை மேற்கொண்டார். தலையை விரித்துக் கொண்டு, ஜடன், பித்தன், பிசாசு போல், ஒருவரையும் எதிர்பார்க்காமல், செவிடன் போன்று, வடக்கு நோக்கி வெளியேறினார். மற்ற சகோதரர்களும் பின் தொடர்ந்தனர். வாஸுதேவனையே மனதில் தியானித்தார்கள். அவர்கள் உலக ஆசை உடையவர்களால் அடையமுடியாத உலகத்தை அடைந்தார்கள். விதுரரும் பிரபாஸ க்ஷேத்திரத்தில் வாஸுதேவனையே தியானம் செய்துகொண்டு தன்னை அழைக்க வந்த பித்ருக்களோடு தன் ஸ்தானத்தை அடைந்தார். அப்பொழுது திரௌபதியும், பகவானை தியானித்து அவனை அடைந்தாள். வாஸுதேவனின் ப்ரியத்திற்கு பாத்திரமான பாண்டவர்களின் மோக்ஷத்தை எவன் ஒருவன் சிரத்தையாக கேட்கின்றானோ அல்லது படிக்கின்றானோ, அவனும் வாஸுதேவனிடம் பக்தியை அடைந்து மோக்ஷத்தை அடைவான்.

## அத்யாயம் 1G

தர்மபுத்திரரால் ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட, அபிமன்யுவின் புத்திரனான பரீக்ஷித் தர்மத்துடன் ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்தான். அது அவனுடைய குலத்துக்கே உரியது. உத்தரன் என்பவரின் பெண்ணான இராவதீ என்பவளை மணந்து கொண்டான். அந்தத் தம்பதிகளுக்கு ஜனமேஜயன் உட்பட நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். பரீக்ஷித்திற்கு கிருபாச்சார்யர் என்பவர் குருவாக இருந்தார். பெயருக்கு ஏற்றார்போல், கிருபையே உருவானவர் அவர். கங்கைக்கரையில் உள்ள பிராஹ்மணர்களை எப்பொழுதும் சேவித்து அவர்கள் மகிழும்படி, நிறைய தானங்களை பரீக்ஷித் அளித்து வந்தான்.

அவனுடைய காலத்தில், அரசர்கள் செய்வதிலேயே மிக உயர்ந்த யாகமான அஸ்வமேத யாகத்தை மூன்று முறைகள் சிரத்தையுடன் செய்து முடித்தான். அப்படி யாகம் செய்யும்பொழுது பரீக்ஷித் தேவர்களை, மனிதர்களைப் பார்ப்பது போல் நேருக்கு நேர் பார்த்தார். பிறகு கலியையும் அடக்கினான் என்று கூறி ஸூத பௌராணிகர் நிறுத்தினார்.

சிரத்தையுடன் புராணம் கேட்டுவரும் சௌனகாதி ரிஷிகள் பின்வருமாறு கூறலானார்கள். "ஸூதரே! பரிக்ஷித், கலியை அடக்கினான் என்று கூறினீர்கள். நல்லதுதான். ஆனால், அந்தக் கதை கிருஷ்ணனைப் பற்றியோ, அவனுடைய அடியார்களைப் பற்றியோ இருக்குமானால் கூறுங்கள். வேறு யாரையாவது பற்றியோ அல்லது வேறு எதைப்பற்றியோ இருக்குமானால் எங்களுக்குச் சொல்லவேண்டாம். ஏனென்றால், மற்ற கதைகளினால் எங்கள் ஆயுளுக்கு நாசம் உண்டாவதைத் தவிர வேறு ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை".

"மேலும் நாங்கள் செய்யும் சத்ரம் என்ற யாகத்தில் பசுவின் பொருட்டு, யமனை அடிக்கடி அழைக்கின்றோம். அப்படி வரும் யமன் எங்களையும் அழைத்துச் செல்லவே பார்ப்பான். அது அவனுடைய ஸ்வபாவம். இதுநாள் வரை அவன் எங்களைத் தொடாததற்குக் காரணம் நாங்கள் கிருஷ்ண கதை கேட்பதே!

நாங்கள் வேறு ஏதாவது கதை கேட்டிருந்தால் இவ்வளவு நேரம் யமனுக்கு உணவாகி இருப்போம்'' என்றார்கள்.

ஒருவன் பல பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பலனாகவே மனிதப்பிறவி கிடைக்கின்றது. ஆனால், அவ்வளவு புண்ணியத்தினால் கிடைத்த மனிதப்பிறவியை மோக்ஷம் அடையவிடாமல் ஏதோ ஒரு பாவம் தடுப்பதுதான் விசித்ரம். மனிதப்பிறவியில் மோக்ஷம் போக விடாமல் பாவம் எப்படி தடுக்கின்றது தெரியமா? சோம்பேறித்தனம், அறிவில்லாமை, இரவில் உறக்கம், பகலில் வீண்பேச்சு, உல்லாசம், கலகம், கேளிக்கை, பயணம் போன்றவற்றால் பொழுதை வீணாக்கி, ஆயுளை மனிதர்கள் கழிக்கின்றனர் என்றார்.

இதைக்கேட்ட ஸூதர், தான் சொல்லக்கூடிய கதை புண்ணியத்தைக் கொடுக்கக்கூடிய கதை என்பதோடு மட்டும் அல்லாமல், ஸம்ஸார பயத்தைப் போக்கி மோக்ஷத்தைத் தரக்கூடியது என்பதால், தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார். பரீக்ஷித் தன் நாட்டின் எல்லைக்குள்ளாகவே, கலிபுருஷன் புகுந்துவிட்டதை அறிந்துகொண்டான்.

கருப்பான குதிரைகளை தேரில் பூட்டிக்கொண்டான். அவனுடைய தேர், சிம்மக்கொடியை உடையது. தன்னுடன் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகளையும் அழைத்துக்கொண்டு கலிபுருஷனை அடக்கப் புறப்பட்டார். செல்லும் வழியில் உள்ள அரசர்களை வென்று, கப்பம் பெற்றான். செல்லும் வழிகளில், பல மஹரிஷிகளின் ஆஸ்ரமத்தைக் கண்டான்.

எந்த ஒரு ரிஷியின் ஆஸ்ரமத்தைக் கண்டாலும், படைகளை தூரத்தில் நிறுத்திவிட்டு, தான் ஒருவனாக இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு பணிவுடன் சென்று சேவிப்பான். ஒவ்வொரு மஹரிஷியும் அவனைக் குளிர, குளிர கடாக்ஷித்து ஏதாவது அவனுடன் ப்ரேம சல்லாபம் செய்வார்கள். "உன்னுடைய தாத்தாவான அர்ஜுனனுக்கு பகவான் வாஸுதேவனே தேர் ஓட்டினான் தெரியமா? நீ யாராவது சொல்லி கேள்விப்பட்டிருக்கின்றாயா? அப்பொழுது உன் தாத்தா, "நான்

யுத்தமெல்லாம் செய்யமாட்டேன்'' என்று பின்வாங்கினார். அப்பொழுதுதான் பகவான் கீதோபதேசம் செய்தான். அதைத்தான் பிரஸ்தானத்ரயத்தில் ஒன்றாக நாங்கள் இன்றும் பாராயணம் செய்து வருகின்றோம்'' என்றார்கள்.

மற்றொரு மஹரிஷி, "அந்த மஹரிஷி தேர் ஓட்டினதைத்தான் சொன்னாரா, பகவான் அந்தத் தேரின் குதிரைகளை தானேதான் குளிப்பாட்டுவான். ஏனென்றால், பகவானுக்கு அர்ஜுனனிடம் மட்டும் அபிமானமில்லை. அர்ஜுனனுடைய குதிரைகள் என்று, அதன்மேலும் ஒரு தனி அபிமானம் என்றால் பார்த்துக் கொள்ளேன்'' என்றார். இவைகளையெல்லாம் கேட்கும் பரிக்ஷித்தின் மனோநிலை எப்படி இருந்திருக்கும்!

(கனியும்)

## சனாதனப் புதிர் : பகுதி – 45 –ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில்)

1. கிருஷ்ண யஜுர் வேதத்தில் எத்தனை காண்டங்கள், ப்ரச்னங்கள், அனுவாகங்கள், பஞ்சாதிகள் இருக்கின்றன?
2. அதர்வண வேதத்தில் எத்தனை காண்டங்கள் - ரிக்குகள் இருக்கின்றன?
3. ரிக், சுக்ல, கிருஷ்ண யஜுர், சாம, அதர்வண வேதங்களின் ப்ராஹ்மண பாகங்கள் எவை?
4. குமரிலபட்டரின் தாய், தந்தையர் பெயர் என்ன? இவர் எந்த ஊரில் பிறந்தார்? எழுதிய நூல்கள் எவை?
5. அக்ரூரர் இவரது தாய் தந்தையர் பெயர் என்ன? இவரது மனைவியின் பெயர் என்ன?
6. நகுலனின் மனைவிகள் யார்? பிள்ளைகளின் பெயர் என்ன?
7. மஹாபாரத குருக்ஷேத்திர யுத்தத்திற்குப் பிறகு துர்மர்ஷணின் அரண்மனை யாருக்கு கொடுக்கப்பட்டது?
8. ஸஹதேவனின் மனைவிகள், பிள்ளைகள் பெயர் என்ன?
9. பூமன்யு இவரது தாத்தா, அப்பா மற்றும் அம்மாவின் பெயர் என்ன?
10. ஏகலவ்யன் இவரது தந்தையின் பெயர் என்ன? யாரால் கொல்லப்பட்டான்?

# ஸ்ரீ ஸுதர்சந சதகம்



(அக்டோபர் இதழ் தொடர்ச்சி)

-ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளியது

**புருஷ வர்ணனம் 75. உடல் ஒளி பெருக**

ஜ்யோதிச் சூடாலமௌளிஸ் த்ரிநயநவதன:
ஷோடசோத் துங்கபாஹு:
ப்ரத்யாலீடேந திஷ்டந்
ப்ரணவசச தராதார ஷட்கோணவர்தீ,
நிஸ்ஸீமேந ஸ்வதாம்நா நிகிலமபி
ஜகத் க்ஷேமவந் நிர்மிமாண:
பூயாத் ஸௌதர்சநோ வ:
ப்ரதிபடபருஷ: பூருஷ: பௌருஷாய ॥75॥

**76. தெய்வ, மானிட ஆபத்துகள் அகல**

வாணீ பௌராணிகீ யம் ப்ரதயதி
மஹிதம் ப்ரேக்ஷணம் கைடபாரே:
சக்திர் யஸ்யேஷு தம்ஷ்ட்ராநகபரசுமுக
வ்யாபிநீதத்விபூத்யாம்.
கர்தும் யத் தத்வபோதோ ந நிசிதமதிபீர்
நாரதாத்யைச்ச சக்ய:
தைவீம் வோ மாநுஷீம் ச க்ஷிபது
ஸ விபதம் துஸ்தராமஸ்த்ரராஜ: ॥76॥

**77. தேக பலம்பெற**

ரூடஸ்தாராலவாலே ருசிரதலசய:
ச்யாமலைச் சஸ்த்ரஜாலை:
ஜ்வாலாபிஸ் ஸப்ரவாள: ப்ரகடித
குஸுமோ பத்தஸங்கை: ஸ்புலிங்கை:
ப்ராப்தாநாம் பாதமூலம் ப்ரக்ருதிமதுரயா
ச்சாயயா தாபஹ்ருத் வ:
தத்தாமுத்தோ: ப்ரகாண்ட:
ஹலமபிலஷிதம் விஷ்ணு ஸங்கல்பவ்ருக்ஷ: ॥77॥

### 78. உள் ஒளி பெருக

தாம்நாமைரம்மதா நாம் நிசயமிவ
சிரஸ்தாயிநாம் த்வாதசாநாம்
மார்த்தண்டாநாம் ஸமூடம் மஹ இவ
பஹுளாம் ரதனபாஸாமிவர்த்திம்
அர்சிஸ் ஸங்காத மேகீக்ருதமிவ
சிகிநாம் பாடபாக்ரேஸராணம்
சங்கந்தே யஸ்ய ரூபம் ஸ பவது
பவதாம் தேஜஸே சக்ரராஜஃ ॥78॥

### 79. யம வேதனை நீங்க

உக்ரம் பச்யாக்ஷமுத்யத் ப்ருகுடி ஸமுகுடம்
குண்டலிஸ்பஷ்ட தம்ஷ்ட்ரம்
சண்டாஸ்த்ரைர் பாஹுதண்டைர்
லஸதநலஸம க்ஷேளமலக்ஷ்யோருகாண்டம்,
ப்ரத்யாலீடஸ்தபாதம் பரதயது
பவதாம் பாலநவ்யக்ரமக்ரே
சக்ரேசோ காலகாலேரித பட
விகடாடோபலோபாய ரூபம் ॥79॥

### 80. கிடைத்ததைப் பாதுகாக்க

சக்ரம் குந்தம் க்ருபாணம்
பரசு ஹு தவஹாவங்குசம் தண்டசக்தீ
சங்கம் கோதண்டபாசௌ
ஹல முஸல கதா வஜ்ர சூலாம்ஸ் ச ஹேதீந்,
தோர்பிஸ் ஸவ்யாபஸவ்யைர்
தததுலபலஸ்தம்பிதாராதிதர்பை:
வ்யூஹஸ் தேஜோபிமாநீ
நரகவிஜயிநோ ஜ்ரும்பதம் ஸம்பதே வ: ॥80॥

### 81. பூர்ண அருள்பெற

பீதம் கேசே ரிபோரப்யஸ்ருஜி
ரதபேத ஸம்ச்ரிதேப்யுத்கடாக்ஷம்
சந்த்ராத: காரி யந்த்ரே
வபுஷிச தளநே மண்டலே ச ஸ்வராங்கம்,

ஹஸ்தே வக்த்ரே ச ஹேதி
ஸ்தபகிதமஸமம் லோசநே மோசநே ச
ஸ்தாதஸ்தோகாய தாம்நே
ஸுரவரபரிஷத்ஸேவிதம் தைவதம் வ: ॥81॥

### 82. செல்வம் நிரந்தரமாக

சித்ரரகாரை: ஸ்வசாரைர்
மித ஸகல ஜகஜ்ஜாகரூக ப்ரதாப:
மந்த்ரம் தந்த்ரா நுரூபம்
மநஸி கலயதோ மாநயந்நாத்மகுஹ்யாந்.
பஞ்சாங்கஸ்பூர்த்திநிர்வர்தித
ரிபுவிஜயோ தாமஷண்ணாம் குணாநாம்
லக்ஷ்மீம் ராஜாஸநஸ்த்தோ
விதுரது பவதாம் பூருஷச் சக்ரவர்த்தி ॥82॥

### 83. இஷ்டசித்தி யடைய

அக்ஷாவ்ருத் தாப்ரமாலாந்யரவிவர
லுடச்சந்த்ர சண்டத்யுதீநி
ஜ்வாலாஜாலாவலீடஸ்புடதுடுபடலீ
பாண்டுதிங்மண்டலாநி,
சக்ராந்தாக்ராந்தசக்ராசலசலி தமஹீ
சக்ரவாலார்தக்ஷோணி
அஸ்த்ரக்ராமாக்ரிமஸ்ய ப்ரததது பவதாம்
ப்ராத்திதம் ப்ரஸ்த்திதாநி ॥83॥

### 84. திருவாழி வட்டத்தில் இருக்க

சூலம் த்யக்தாத்மசீலம் ஸ்ருணிரணுகக்ருணி:
பட்டிஸ: ஸ்பஷ்ட ஸாத:
சக்திச் சாலீ நசக்தி: குலிசமகுசலம்
குண்டதார: குடார:
தண்டச் சண்டத்வசூந்யோ பவதி தநு தநுர்
யத் புரஸ்தாத் ஸ வ: ஸ்தாத்
க்ராஸ்தாசேஷாஸ்த்ரகர்வோ ரதசரணபதி:
கர்மணே சார்மணாய ॥84॥

### 85. புகழ் ப்ரகாசிக்க

க்ஷுண்ணாஜாநேயப்ருந்தம் க்ஷுபிதரதகணம்
ஸந்நஸாந்நாஹ்யயூதம்
க்ஷ்வேலாஸம்ரம்பஹேலாகலகலவிகலத்
பூர்வகீர்வாணகர்வம்,
குர்வாணஸ் ஸாம்பராயம் ரதசரணபதி:
ஸ்தேயஸீம் வ: ப்ரசஸ்திம்
துக்தாம் துக்தாப்திபாஸம்பயவிவச
சுநாஸீரநாஸீரவர்தீ ॥85॥

### 86. புகழ் குன்றாதிருக்க

த்ருஹ்யத் தோச்சாலி மாலி ப்ரஹரண
ரபஸோத்தாநிதே வைநதேயே
வித்ராதி த்ராக் ப்ரயுக்த: ப்ரதநபுவி
பராவர் தமோநேந பர்த்ரா,
நிர்ஜித்ய ப்ரத்ய நீகம்
நிரவதிகசரத் தாஸ்திகாச்வீய ரத்யம்
பத்யம் விச்வஸ்ய தாச்வாந் ப்ரதயது
பவதோ ஹேதிரிந்த்ராநுஜஸ்ய ॥86॥

### 87. தீமை நன்மையாக

நந்தியாயநந்தசூந்யே கலதி கணபதௌ
வ்யாகுலே பாஹுலேயே
சண்டே சாகித்யகுண்டே
ப்ரமதபரிஷதி பராப்தவத்யாம் ப்ரமாதம்,
உச்சித்யாஜௌ பலிஷ்டம் பலிஜபுஜவநம்
யோ ததாவாதிபிக்ஷோ:
பிக்ஷாம் தத்ப்ராணரூபாம் ஸபவதகுசலம்
க்ருஷ்ணஹேதி: க்ஷிணோது ॥87॥

### 88. அபகரிப்பிலிருந்து விடுபட

ரக்தௌகாப்யக்த முக்தாபல லுலித
லலத் வீசிவ்ருத்தௌ மஹாப்தௌ
ஸந்த்யாஸம்பத்ததாரா
ஜலதரசபலாகாச நீகாசகாந்தௌ,

கம்பிராரம்பமம்பச் சரமஸூரகுலம்
வேதவிக்நம் விநிக்நந்
நிர்விக்நம் வ: ப்ரஸூதாம் வ்யபகதவிபதம்
ஸம்பதம் சக்ரராஜ: ॥88॥

**89. உலகம் போற்றும் அருளைப்பெற**

காசீவிப்லோஷ சைத்யக்ஷபண
தரணிஜத்வம்ஸ ஸூர்யாபிதாந
க்ராஹத்வேதாத்வ மாலித்ருடநமுக
கதாவஸ் துஸத்கீர்திகாதா:
கீயேந்தே கிந்நரீபி: கநககிரிகுஹா
கேஹிநீபீர் யதீயா:
தேயாத் தைதேயவைரீ
ஸ ஸகலபுவநச்லாகநீயாம் ச்ரியம் வ: ॥89॥

**90. அறியாமை அறவே அகல**

நாநாவர்ணாந் விவ்ருண்வந்
விரசிதபுவநாநுக்ரஹாந் விக்ரஹாந் ய:
சக்ரேஷ்வஷ்டாஸூ ம்ருஷ்டாஸூரவர
தருணீ கண்ட கஸ்தூரிகேஷு:
ஆதாரா தர்ணமாலாவதிஷு வஸதி ய:
பூருஷோ வஸ் ஸ தேயாத்
வ்யத்வைருத்தூ தஸத்த்வை:
உபஹிதமபஹிர்த்வாந்தமத்வாந்தவர்தீ ॥90॥

**91. ஆயுள்பூராவும் அருள்கிட்ட**

த்வா த்ரிம்சத் ஷோடசாஷ்ட ப்ரப்ருதி
ப்ருதுபுஜ ஸ்பூர்திபிர் மூர்த்திபேதை:
காலாத்யே சக்ரஷட்கே ப்ரகடிதவிபவ:
பஞ்சக்ருத்யா நுரூபம்,
அர்த்தாநாமர்த்தி தாநாமஹரஹரகிலம்
நிர்விலம்பைர் விலம்பை:
குர்வாணோ பக்தவர்கம்
குசலிநமவதாதாயுதக்ராமணீர் வ: ॥91॥

### 92. சுதர்சனர் தரிசனம் அளிக்க

கோணைரர்ணைஸ் ஸரோஜைரபி
கபிசகுணைஷ் ஷட்பிருத்பின்ன சோபே
ஸ்ரீவாணிபூர்விகாபிர் தததி விலஸத:
சக்திபி: கேசவாதீந்,
தாராந்தே பூபுராதௌ
ரதசரணகதா சார்ங்க கட்காங்கிதாசே
யந்த்ரே தந்த்ரோதிதே வ:
ஸ்புரது க்ருதபதம் லக்ஷ்ம லக்ஷ்மீஸகஸ்ய ॥92॥

### 93. உடல் வியாதி தெரிக்க


தம்ஷ்ட்ராகாந்த்யா கடாரே
கபடகிடிதநோ: கைடபாரே ரதஸ்தாத்
ஊர்த்த்வம் ஹாஸேந வித்தே
நரஹரிவபுஷோ மண்டலே வாஸவீயே,
ப்ராக் ப்ரத்யக் ஸாந்த்ய ஸாந்த்ரச்சவிபரபரிதே
வ்யோம்நி வித்யோதமாந:
தைதேயோத்பாதசம்ஸீ ரவிரிவ
ரஹயத்வஸ்த்ரராஜோ ருஜம் வ: ॥93॥

### 94. எதிரிகள் பயந்தோட

கோணே க்வாபி ஸ்திதோபி
த்ரிபுவநவிததச் சந்த்ரதாமாபி ரூக்ஷ:
ருக்மச்சாயோபி க்ருக்ஷ்ணாக்ருதி:
அநலமயோப்யாச்ரித த்ராணகாரி,
தாராஸாரோபி தீப்தோ திநகர ருசிரோபி
உல்லஸத்தாரகஸ்ரீ:
சக்ரேசஸ் சித்ரபூமா விதரது
விமதத்ராஸனம் சாஸநம் வ: ॥94॥

[95 முதல் அடுத்த இதழில் இடம்பெறும்]


WEB
MOBILE APPS
BUDDIES INFOTECH
PRIVATE LIMITED
DESIGN
GAMES
75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com


LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
DREAM what you want to,
GO where you want to,
BE what you want to.
Because you have only
one LIFE and one CHANCE
...THAT's LIFE
Please Call your Well Wisher:
RENGARAAJAN KVR
Wealth Consultant, LIC of India,
Mob:+91 99406 12348
Email: blessingslic@gmail.com
Plan your Future & Dream with LIC.
* RETIREMENT PLANNING (Till 100 YEARS)
* CHILD CAREER (Higher Education / Career / Marriage)
Advt

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

Our products

Globe Tipper | Unit Converter | Smart Alarm Pro | DRACO, The Dragon

Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

Advt

For any Business Related Enquiry email us at contact@vapssky.com

rb

rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

website: www.rajmanibuilders.com

Advt

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று -7



திரு.எஸ்.ராஜப்பன்

பழைய சீவரம் ஸ்ரீலக்ஷ்மிநரசிம்ம பெருமாள் கோயிலுக்கு வருடந்தோறும், தைமாதம் காணும் பொங்கலன்று காஞ்சீபுரத்திலிருந்து பரிவேட்டை அல்லது மலை உத்ஸவம் என்னும் உத்ஸவத்திற்கு ஸ்ரீவரதராஜப் பெருமாள் எழுந்தருளுகிறார். இம்மலை உச்சியில் அமைந்துள்ள கல் மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளப்பட்டு, பக்தர்களுக்கு சேவை சாதிக்கின்றார். மலை உச்சிக்கு போகும் பாதையில் இத்திருக்கோயிலின் திருக்குளம் அமைந்துள்ளது.

இங்கு பெருமாளை சேவித்து தீர்த்த ப்ரஸாதங்களைப் பெற்றுக் கொண்டு, நமது ஸத்குருநாதரின் அளப்பரிய கருணையை எண்ணி எண்ணி இன்புற்று சென்னை திரும்பினோம். 09.01.2012 காலை நமது ஸ்வாமிகளின் திருக்கமலப் பாதங்களில் சாஷ்டாங்கமாக சேவித்து, அவரது அன்புக்கட்டளையை எதிர்நோக்கி நின்றோம்.

மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேச நரஸிம்ஹ பெருமாள் கோவிலுக்குச் சென்று, சேவித்துவிட்டு வருமாறு எங்களுக்கு உத்தரவாகியது. அதன்படி நாங்கள் இத்திருக்கோயிலுக்குச் சென்றோம். சைதாப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்தும், மேற்கு சைதாப்பேட்டைக்கு வரும் பேருந்துகளிலும் இத்திருக்கோயிலுக்கு வரலாம். இந்தப் பகுதி முன்பு சைபர்கான்பேட்டை என்ற பெயருடன் அழைக்கப்பட்டது. இச்சொல் காலப்போக்கில் திரிந்து, சைதாப்பேட்டை என ஆகியதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீரகுநாதபுரம் என்ற புராதனப் பெயரும் இத்தலத்திற்கு இருந்ததாக அறியப்படுகிறது. இத்திருக்கோயில், 12ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு கர்ப்பக்கிரஹத்தில் மூலவர் ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேச பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராக நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

மூலவரின் பாதத்திற்கு அருகில் ஸ்ரீ நரஸிம்ஹர் சிம்மமுகத்துடன் இல்லாமல், சுயரூபத்துடன் சாந்தமான முகத்துடன் இருக்கிறார். எனவே, இப்பெருமாள் அழகிய சிங்கர் என்றும் அழைக்கப்படுகிறார்.


இங்குள்ள தாயார் சன்னதி இருக்கும் இடத்தில் புற்று ஒன்று இருந்ததாகவும், அதனுள் தாயாரின் விக்கிரகம் இருந்ததாகவும், அந்த விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. தாயாரின் முகத்தில் வடுக்கள் காணப்படுகின்றன. பங்குனி உத்திரத்தன்று பெருமாள் தாயார் சன்னதிக்கு எழுந்தருளி, திருக்கல்யாணம் செய்து கொள்கிறார். கோயில் முன் மண்டபத்தில், ராமர் சன்னதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவர் ராமர் வலப்புறம் சீதையுடனும், இடப்புறம் லக்ஷ்மணருடனும் திருமணக்கோலத்தில் காட்சி தருகிறார். உத்ஸவர் ராமர் வலப்புறம் லக்ஷ்மணனுடனும் இடப்புறம் சீதையுடனும், பட்டாபிஷேகத் திருக்கோலத்தில் காட்சி கொடுக்கிறார். இவரது சன்னதிக்கு எதிரில் ஸ்ரீஆஞ்சனேயருக்கு சிறிய சன்னதி உள்ளது.

இத்திருக்கோயிலில் சித்திரை மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் துவங்கி, 10 நாட்கள் ப்ரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. ஆவணி திருவோணத்தன்று, அன்னக்கொடி உத்ஸவம் நடைபெறுகிறது. பெருமாளுக்கு கோவர்த்தனகிரிதாரி அலங்காரம் செய்யப்படுகின்றது. ஜாதகத்தில் க்ருஹதோஷம் உள்ளவர்கள் ஸ்ரீஅலர்மேல் மங்கைத்தாயார் சன்னிதி முன்பு, நெல் பரப்பி, அதில் நெய் தீபம் ஏற்றி வழிபாடு செய்கின்றனர். இதனால் தோஷ நிவர்த்தி ஆவதாக நம்பிக்கை உள்ளது. ப்ரார்த்தனை நிறைவேறியதும், பக்தர்கள் தாயாருக்கு திருமஞ்சனம் செய்துவைத்து நேர்த்திக்கடனை செலுத்துகிறார்கள்.

மாத புனர்பூச நக்ஷத்திர தினங்களில் இராமபிரானுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்யப்பட்டு, உட்பிரகாரத்தில் புறப்பாடு செய்யப்படுகின்றது. ஸ்ரீராமநவமி உத்ஸவம் 10 நாட்களுக்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.


(தொடரும்)

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Guruam Consulting Private Limited

# பாலகர்களுக்கு ஒரு கதை



## உண்மையான தானம்

கங்காராம் என்ற சாது எல்லோருக்கும் நன்மை புரிந்து வந்தார். அவர் நிறைய அன்னதானமும் செய்வது வழக்கம். வசதி படைத்தோரிடம் இருந்து செல்வம் பெற்று ஏழை, எளியோருக்கு தேவையானதையும் செய்வார். கங்காராம் ஊர் ஊராக செல்வது வழக்கம். அப்படி அவர் சென்ற ஓர் ஊரில், வசதியான மனிதர் ஒருவர் கருமியாக இருந்தார். கங்காராம் அந்த ஊரில் இருந்த ஏழை மக்களுக்கு ஏதாவது நல்லது செய்ய ஆசைப்பட்டார். அதனால் அந்த பெரிய மனிதரை பார்த்து பணம் கேட்க முடிவு செய்தார். அவரை அப்படி செய்ய வேண்டாம் என்று சொல்லி பலரும் தடுத்தனர். ஆனால் கங்காராம் கேட்கவில்லை.

கங்காராம் நேராக அந்த மனிதரிடம் சென்றார். "அய்யா! ஒரு ஆயிரம் காசுகள் தாருங்கள். அதை கொண்டு இவ்வூர் எளிய மக்களுக்கு தேவையான உணவை அளிப்பேன். நீங்கள் பணம் தந்ததாக எல்லோருக்கும் அறிவிப்பேன். எல்லோரும் உங்களை புகழ்வார்கள். மேலும் எப்படியாயினும், இந்த காசுகளை நான் இரு நாட்களுக்குள் உங்களுக்கு திருப்பி கொடுத்து விடுகிறேன்" என்றார். புகழுக்கு ஆசைப்பட்டு அம்மனிதர் ஆயிரம் காசுகள் கொடுத்தார்.

கங்காராம், அப்பணத்தை எடுத்து கொண்டு சென்று எல்லோரிடமும் காண்பித்தார். "பாருங்கள்! நீங்கள் கருமி என்று சொன்னவர், எவ்வளவு உபகாரி என்று தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொன்னார். எல்லோரும் ஆச்சரியப்பட்டு போயினர். மேலும் சில நல்ல வசதி படைத்தவர்கள் கங்காராமிடம் மனமுவந்து உபகாரம் செய்தனர். அன்னதானம் மிக விமரிசையாக நடந்தது. அதற்குள்ளாக அந்த கருமியான மனிதரை பார்க்க பலர் சென்று இருந்தனர். எல்லோரும் அவரை புகழ்ந்தனர். நிருபர்களெல்லாம், அவரை பார்த்து பேட்டி கண்டனர். நாளை

பத்திரிக்கையில் போடுகிறோம் என்றனர். உதார குணம் கொண்ட உங்களை தவறாக கருமி என்று நினைத்து விட்டோம் என்று பலர் சொல்லி வருத்தப்பட்டனர். அவர் மகிழ்ச்சியில் மூழ்கினார். மாலையானவுடன் சாது அந்த மனிதரை தேடி வந்து ஆயிரம் காசுகளை திருப்பி கொடுத்தார். அம்மனிதர் அதை வாங்க மறுத்து "அய்யா! இன்று நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னை பலரும் புகழ்கின்றனர். மனது திருப்தியாக இருக்கிறது. நன்மை செய்வதனால் இவ்வளவு மனம் லேசாகும் என்று எனக்கு தெரியாது. உங்கள் இஷ்டம் போல் இதை கொண்டு நன்மை செய்யுங்கள்" என்றார்.

கங்காராம் அவரிடம் "நன்றாக யோசித்து சொல்லுங்கள். எல்லோரும் புகழ்வது என்பதுதான் உங்களுக்கு மகிழ்ச்சியா?" என்று கேட்டார். உடனே, அப்பெரிய மனிதர் கொஞ்சம் யோசித்து, "ஊர் பெரியவர்கள் சம்மதமாக ஒரு காரியம் செய்ததுதான் எனக்கு பெரிய மகிழ்ச்சி" என்றார். மேலும் தொடர்ந்தார், "என் உள்ளே இருக்கும் இறைவன் மனசாட்சியாய் இருந்து நல்ல காரியம் செய்ய என்னை அறிவுறுத்துகிறான். நான்தான் அவன் சொல்லை கேட்கவில்லை. அவன் சொல்வதை நீங்கள் எனக்கு புரிய வைத்தீர்கள். மிக்க நன்றி" என்றார். கங்காராம் சந்தோஷப்பட்டு ஆசீர்வதித்து அங்கிருந்து கிளம்பினார். அப்பொழுது அம்மனிதர் "அய்யா! நீர் அன்னதானம் மட்டும் செய்யவில்லை; என் போன்றோருக்கு, மிகவும் அவசியமான ஞானதானமும் செய்கிறீர்" என்றார்.

## Transformational Leadership (workshop)

**அக்டோபர் 11, 2012** அன்று Gayton Library, Tuckahoe, Virginia, USAவில் ராமானுஜம்ஜி கூட்டு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான தலைமை பயிற்சி Transformational Leadership (workshop) ஒன்றை நடத்தினார். இதில் பல பெரிய நிறுவனங்களில் இருந்து வந்தோர் முன்பு, ராமானுஜம்ஜி தலைவராவதற்கு தேவையான தலைமைப்பண்புகளை எப்படி வளர்த்து கொள்ள முடியும் என்றும், எப்படி தலைவர் முன்னோடியாக இருந்து பிறர் தன்னை பின்பற்றும்படி செயலாற்றி காண்பிக்கிறார் என்பது குறித்தும் விரிவாக பேசினார்.

**செப்டம்பர் 29 – ஸ்ரீராமகயா தீர்த்தம் கோவிந்தபுரம்** – பகவான் ஸ்ரீராமபிரான் தஷிணதேசம் வந்து, காவேரி தீர்த்தத்தில் பாணதீர்த்தத்தை ஏற்படுத்தி, ஸ்நானம் செய்து, ஸ்ரீபாணபுரீஸ்வரரையும் பிரதிஷ்டை செய்து, இங்கு பித்ரு தர்ப்பணம், சிராத்தம், பிண்ட பிரதானம் செய்து, மேலும் இங்கு பித்ரு தர்ப்பணம், சிராத்தம், பிண்ட பிரதானம் செய்தால் கயாசிராத்த பலன் உண்டு என்று சொன்னதாக திருவிடைமருதூர் ஸ்தலபுராணம் சொல்கின்றது. பிற்காலத்தில் கோவிந்தபுரம் என்று பிரசித்தி பெற்ற இந்த க்ஷேத்ரத்தில், ஜகத்குரு ஸ்ரீபகவன்னாம போதேந்திர ஸ்வாமிகளின் ஜீவ சமாதி அமைந்துள்ளது. ஸ்ரீநாராயண ஸ்வாமி சிவன் அவர்களின் பரம்பரை நிர்வாகத்தில் உள்ள அருள்மிகு மஹாகணபதி மற்றும் காசி விசாலாஷி ஸமேத காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான மனையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஸ்ரீசுந்தர் பரத்வாஜ் அவர்களால், இங்கு ஒரு நூதனமான கோவில் கட்டப்பட்டு, அதில் கதாதர மூர்த்தியையும், விஷ்ணு பாதத்தையும் பிரதிஷ்டை செய்து தர்ப்பணம் செய்யும் இடத்தையும் புதிதாக நிர்மாணம் செய்து , ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகளின் அவதார தினமான 29/9/2012 அன்று, மஹா கும்பாபிஷேகம், பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் முன்னிலையில் நடைபெற்று, ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**செப்28 – அக்4** – முல்லைவாசல் "மஹாமஹோபாத்யாய" ப்ரும்மஸ்ரீ டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் சென்னை சமஸ்கிருத கல்லூரியின் முன்னாள் முதல்வர். அவர் ஸ்ரீஸ்வாமிஜியிடம் மிகவும் ப்ரியம் உடையவர். அவருடைய தகப்பனார் மேட்டூர் **ப்ரும்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகளின் ஜன்மசதாப்தி மஹோத்ஸவத்தை** நான்கு வேத பாராயணம், சாஸ்திர சதஸ், உபன்யாசம் முதலியவற்றுடன் வெகு விமரிசையாக, சென்னை ஹேமமாலினி விவாஹ மண்டபத்தில் செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 4 வரை கொண்டாடினார். இவ்வைபவத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நமது சாந்தீபனி குருகுல வேதபாடசாலையில் இருந்து சுமார் 70வித்யார்த்திகள் ஏழு

நாட்கள் நடந்த வேதபாராயணத்திலும், கலந்து கொண்டு பாராயணம் செய்தனர்.

**அக்டோபர் 15 -** சென்னை பாரதிதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவிலில், நவராத்திரி விழாவை ஸ்ரீஸ்வாமிஜி துவக்கி வைத்து அருளுரை வழங்கினார்கள்.

**அக்டோபர் 24 -** சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாளின் அவதார உற்சவம் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மிக விமரிசையாக நடைபெற்றது. **அக்டோபர் 16-24 -** மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு நவராத்திரி உற்சவம் கொண்டாடப்பட்டது. மதுரபுரி ஆஸ்ரமத்திலும் சென்னை ப்ரேமிக பவனத்திலும் ஸ்ரீமத்ராமாயண பாராயணமும் நடைபெற்றது.

**அக்டோபர் 13 -** மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாளுக்கு உகந்த மாதமான புரட்டாசி மாதத்தில் பல்வேறு ஊர்களில் இருக்கும் அன்பர்கள் மாலையணிந்து விரதமிருந்து கடைசி சனிக்கிழமையன்று வந்து பெருமாளை தரிசித்து விரதத்தை பூர்த்தி செய்வது வழக்கம். அதுபோல் இவ்வாண்டும் முதல்நாளான வெள்ளிக்கிழமையன்றே பெரும் திரளான அன்பர்களும் சனிக்கிழமை காலை மணிமங்கலத்திலிருந்தும் ஸ்ரீபெரும்புதூரிலிருந்தும் அன்பர்கள் பாதயாத்திரையாகவே மஹாரண்யம் வந்தடைந்தார்கள். காலையில் பெருமாளுக்கு அன்னகூடோத்ஸவமும், ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நகரகீர்த்தனமும், கூட்டு பிரார்த்தனையும் மிக சிறப்பாக நடைபெற்றது. அன்பர்களுக்கு சிறப்பான அன்னதானமும் வழங்கப்பட்டது.

***அமெரிக்க நாட்டில் சத்சங்கங்கள் -*** ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாணைப்படி Global Organisation For Divinity, U.S.A சார்பாக ராமானுஜம்ஜி அமெரிக்காவில் நாமகீர்த்தனம், பாகவதம் குறித்து பல சத்சங்கங்களை நிகழ்த்த சென்றிருந்தார். முதலில் ***அட்லாண்டா*** மான்டெஸ்ஸோரி ஸ்காலர்ஸில் **அக்டோபர் 4 - 7, 2012** தேதிகளில் ராமானுஜம்ஜி பாகவதத்தின் ஸாரத்தை மிக அழகாக எடுத்து பேசினார். பூர்த்தி நாளன்று கோபகுடீர குழந்தைகள் ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்களை அழகாக பாடி நாட்டியம்

ஆடினர். ராமானுஜம்ஜி பகவன்னாம மஹிமை குறித்து பேசி, மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையையும் நிகழ்த்தினார். **அக்டோபர் 9, 2012** அன்று அட்லாண்டா ஹனுமான் மந்திரில் பல மஹான்கள் போதித்த கலியுகத்திற்கு ஏற்ற எளிய நாமசங்கீர்த்தனமானது தினமும் அனுசரிக்க வேண்டிய ஒன்று என வலியுறுத்தி பேசினார்.

**அக்டோபர் 12 - விர்ஜினியா** ஹிந்து சென்டரில் மதுரஉத்ஸவம் கொண்டாடப்பட்டது. மஹாமந்திர கீர்த்தனம் மற்றும் கோபகுடீர குழந்தைகளின் நாட்டியத்திற்கு பின், ராமானுஜம்ஜி Practical Wisdom to modern life என்ற தலைப்பில் சிரவணத்தில் மௌனம் கலந்து இருக்கிறது என்பதையும், எளிதில் மனதை சாந்தப்படுத்தும் நாமகீர்த்தனம் செய்ய எந்த நியமங்களும், தடைகளும் இல்லை என்பதையும் அழகாக எடுத்து பேசினார். **அக்டோபர் 13** & **14** தேதிகளில் நியூயார்க் ரங்கநாதஸ்வாமி மற்றும் நியூஜெர்ஸி குருவாயூரப்பன் கோவில்களில் பாகவததர்மத்தில் முக்கியமான நாமசங்கீர்த்தனம் குறித்து ராமானுஜம்ஜி விரிவாக கேட்போர் உள்ளத்தில் பதியும்படி பேசினார்.

**அக்டோபர் 18, 19 – போஸ்டன் –** த்வாரகாமாயி வித்யாபீடம் ஸ்ரீஷீரடி பாபா கோவிலில் ராமானுஜம்ஜி பாகவதத்திலிருந்து சிரவணம் மற்றும் நாமகீர்த்தனத்தின் மேன்மையை எடுத்து பேசினார். **அக்டோபர் 20, 21** Quincy, MA வில் ராமானுஜம்ஜி முன்னிலையில் கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் பக்த சரித்திர நாடகங்களும் மதுர உத்ஸவத்தின் அங்கமாக இடம்பெற்றன. கோபகுடீர நிகழ்ச்சிகளின் மூலம் குழந்தைகளை அருமையாக வளர்க்கலாம் என்று ராமுஜி பல பெற்றோர்களிடம் கலந்து பேசினார். சுமார் 150 குழந்தைகளும் 120 பெற்றோர்களுமாக இதில் பங்கு கொண்டனர். New Hampshire Hindu Temple in Nashua விலும் ராமானுஜம்ஜி அக்டோபர் 21 அன்று பாகவதம் குறித்து உபன்யாசம் செய்தார். மேலும் அட்லாண்டா, விர்ஜினியா, நியூஜெர்ஸி, நியூயார்க், போஸ்டன் ஆகிய நகரங்களில் பல அன்பர்களின் இல்லங்களில் **மதுரஸ்மிருதி**யான ஸத்குருநாதரின் சரித்திரம், **பாகவதம்**, குருநாதரின் மஹாமந்திர கீர்த்தனை "**கலியையும் பலிகொள்ளும்**" குறித்து சத்ஸங்கங்களை நிகழ்த்தினார்.

**அக்டோபர் 6** - துறையூர் அருகே செங்காட்டுபட்டி வரதராஜபெருமாள் கோவிலில் முரளிஜி பகவன்னாம மஹிமை குறித்து பேசி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் நிகழ்த்தினார். **அக்டோபர் 8 மற்றும் 9** தேதிகளில் முரளிஜி திருச்சி சிவானந்தா பாலாலய ராமலிங்க நகர் மற்றும் வயலூர் பிரிவு பள்ளிகளில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார். 400க்கும் மேலான மாணவர்கள் இதில் கலந்து கொண்டு உற்சாகமாய் நாமகீர்த்தனம் செய்தனர். **அக்டோபர் 14 முதல் 22** வரை **விருதுநகரில்** முரளிஜியின் **ஸ்ரீமத்ராமாயண உபன்யாசம்** நடைபெற்றது. தினமும் சிரத்தையுடன் கலந்து கொண்ட 300க்கு மேற்பட்ட அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

## சனாதனப்புதிர் பகுதி 44 - விடைகள்- ஆத்ரேயன்

1. யுவனாச்வன். யாகத்தில் அவனது பத்தினிக்கு தர வேண்டிய தீர்த்தத்தை அரசனே குடித்துவிட்டபடியால் கர்ப்பம் தரிக்குமாறு ஆயிற்று

2. ச்யவனர். ச்யவனர் அஸ்வினி குமாரர்களுக்கு யாகத்தில் சோம ரஸம் அளித்தார். இது இந்திரனுக்கு பிடிக்கவில்லை

3. நான்கு கொம்புகள், மூன்று பாதங்கள், இரண்டு தலைகள், ஏழு கைகள் அக்னிக்கு இருக்கின்றன.

4. விஸ்வகர்மா என்ற தேவ சிற்பி.

5. சுதர்மா.

6. ஜயந்தன் - பிள்ளை; ஜயந்தி - பெண்.

7. தைத்ரீய ஆரண்யகம் முதல் ப்ரச்னம்.

8. மாப்பிள்ளை துருவ நக்ஷத்திரத்தைப் பார்க்க வேண்டும். மணப்பெண் ஸப்தரிஷி மண்டலத்தில் வசிஷ்டருக்கு அருகாமையில் உள்ள அருந்ததி நக்ஷத்திரத்தைப் பார்க்க வேண்டும். இப்படி செய்வதால், மணப்பெண் தீர்க்க சௌமாங்கல்யத்துடன் இருப்பாள்

9. சரத்வான் - பிள்ளை; கிருபர் - பேரன் ; கிருபி - பேத்தி - கௌதமி என்ற கோதாவரி நதி.

10. 10 - 1028 - 10552 என்ற கணக்கு

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- *ஜனனி*

## ஸ்ரீஹித ஸந்த்தாஸ் பாபாஜி- 1

ப்ருந்தாவனத்தில், பக்தர்கள் மற்றும் ஸாதுக்களின் ஸேவையை ஜீவனமாக கொண்டுள்ளார்கள் பல மஹான்கள். அவர்களில் முக்கியமான ஒருவர் ஸ்ரீஹித ஸந்த்தாஸ் பாபாஜி என்பவர். சுமார் 60-70 வருடங்கள் முன்பு வாழ்ந்த இவர், ராதா வல்லப ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த கோஸ்வாமி ஸ்ரீராதாலால்ஜி என்பவரிடம் தீக்ஷை பெற்று, ஸ்ரீஹித ஸ்வாமினிசரண்ஜி எனும் மஹானின் சிஷ்யராகவும் இருந்தார்.

இவரது ஸந்த்-ஸேவையானது ஈடு இணை இல்லாததாக இருந்தது. ஒரு நாள் கூட தவறாமல், அவர் வ்ரஜத்தில் பத்து-பன்னிரெண்டு வீடுகளில் பிக்ஷை எடுத்து கோதுமை மாவு சேகரிப்பார். பின் தானே அதில் சமைத்து பகவானுக்கு நிவேதனம் செய்துவிட்டு, வரும் ஸாதுக்களுக்கும் பக்தர்களுக்கும் அன்னமிடுவார். ஸந்த் ஸேவை ஆன பின்பு, சாயங்காலமாக அவர் உணவு உண்பார். அவர் வாயிலில் வந்த ஒருவரும் பசி என்று திரும்பியதாக சரித்திரமேயில்லை.

சித்ரகூடத்தைச் சேர்ந்த மஹந்த் ஸ்ரீஜக்தேவ்தாஸ்ஜீ என்பவரும், ஸந்துக்களின் ஸேவையையே தனது உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். அவரிடம் ஐஸ்வர்யம் மிகுதியாக இருந்தது. இவ்வளவு ஐஸ்வர்யமும் ஸாது-ஸேவையால் மட்டுமே பயனுள்ளது ஆகும் என்று எண்ணி, இரவும் பகலும் தன்னை ஸாது ஸேவையில் ஈடுபடுத்திக் கொண்டார். ஒரு முறை சில ஸாதுக்கள் ப்ருந்தாவனத்தில் ஸந்த்தாஸ்ஜியுடன் சிறிது காலம் தங்கியபின் பயணம் மேற்கொண்டு சித்ரகூடம் வந்தடைந்தார்கள். ஜக்தேவ்தாஸ்ஜீயிடம் ஸந்த்தாஸ்ஜீ செய்யும் ஸாதுஸேவையைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறினார்கள்.

ஜகதேவ்தாஸ்ஜீ ஒரு முறை ப்ருந்தாவனம் வந்தார். ஸந்த்தேவ்தாஸ் பாபாவை காண அவா கொண்டு விசாரித்தபடியே மதன்டேர் எனும் இடம் வந்தடைந்தார். அங்கு ஒரு உயரமான பாபா தனது வலது தோளில் காவடி போல் இரண்டு பெரிய குடங்களையும், தலைமேல் பல பானை-களையும், இடது கையினால் ஒரு பெரிய மரக்கட்டைகளின் கட்டையும் இழுத்தவாறு, வந்து கொண்டிருந்தார்.

"இங்கு ஸந்த்தாஸ் பாபா எங்கிருக்கிறார்?" என்று ஜகதேவ்தாஸ்ஜீ அவரிடம் கேட்டார். "இங்கே அருகிலேயேதான் வஸிக்கிறார். வாருங்கள்; நானே உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன்" என்று மிகவும் பணிவாக அந்த பாபா கூறினார்.

ஜகதேவ்தாஸ்ஜீ அவரை பின் தொடர்ந்தார். சிறிது தூரம் சென்றதும் ஒரு குடிசையின் அருகில் பாபா தனது ஸாமான்களை வைத்தார். ஜகதேவ்தாஸரிடம் அவர், "இங்கு சற்று விச்ராந்தி எடுத்துக் கொள்ளுங்கள் பிறகு நான் உங்களை ஸந்த்தாஸ் பாபாவை சந்திக்க அழைத்துச் செல்கின்றேன்" என்றார்.

ஜகதேவ்தாஸரும் அங்கேயே அமர்ந்தார். பாபா அவர் யார் என்று விசாரிக்க, ஜகதேவ்ஜீயும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் யார் என்று தெரிந்த உடன், அந்த பாபா ஸாஷ்டாங்கமாக அவரை நமஸ்கரித்து, "அஹோ பாக்யம்! மஹாராஜ்! உங்களுடைய ஸந்த்-ஸேவா மற்றும் ஸாதுக்களிடம் தங்களுக்குள்ள நிஷ்டையைப் பற்றி பெரிதும் கேள்விப்பட்டிருக்கிறேன்! இன்று உங்களுடைய தரிசனம் பெற்று தன்யனானேன். நான் உங்களை இப்படியே செல்ல அனுமதிக்க மாட்டேன். நீங்கள் இளைப்பாருங்கள். நான் விரைவில் சமைத்து டாகுருக்கு நைவேத்யம் செய்து விடுகிறேன். தாங்கள் ப்ரஸாதம் ஸ்வீகரித்த பின்னரே நான் உங்களை ஸந்த்தாஸ்ஜீயிடம் அழைத்துச் செல்வேன்" என்றார்.

"இல்லை பாபா! நான் முதலில் ஸந்த்தாஸ்ஜீயை தரிசித்த பின்னரே ப்ரஸாதம் எடுத்துகொள்வேன்" என்று கூறியவாறே மஹந்த் எழுந்து கொண்டார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 112*



–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

திருமாலை பற்றிய ஐந்தாம் (பரிபாடல் 13ஆம் பாடல்)

<u>திருமாலை வணங்குவோர் பெறும் பேறு</u>

*மணிவரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று*
*அணிவனப்பு அமைந்த பூந்துகில், புனைமுடி,*
*இறுவரை இழிதரும் பொன்மணி அருவியின்*
*நிறனொடு மாறும் தார், புள்ளுப்பொறி புனைகொடி,*
*விண் அளி கொண்ட வியன்மதி அணிகொளத்*
*தண் அளி கொண்ட அணங்குடை நேமிமால்!*
*பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த*
*இருவேறு மண்டிலத்து இயக்கம் போல,*
*நேமியும் வளையும் ஏந்திய கையான் -*
*கருவி மின்ன அவர் இலங்கும் பொலம்பூண்*
*அருவி உருவின் ஆரமொடு, அணிந்தநின்*
*திருவரை அகலம் - தொழுவோர்க்கு*
*உரிதுஅமர் துறக்கமும் உரிமை நன்கு உடைத்து*

<u>திருமால் எங்கும் எல்லாமுமாய் ஆகி நிற்கின்ற தன்மை</u>

*சுவைமை இசைமை தோற்றம் நாற்றம் ஊறு*
*அவையும் நீயே அடுபோர் அண்ணால்!*
*அவை அவை கொள்ளும் கருவியு நீயே*
*முந்தியாங் கூறிய ஐந்த னுள்ளும்*
*ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே;*
*இரண்டின் உணரும் வளியும் நீயே;*
*மூன்றின் உணரும் தீயும் நீயே;*
*நான்கின் உணரும் நீரும் நீயே;*
*ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே;*
*அதனால் நின்மருங் கின்று - மூ ஏழ் உலகமும்*
*மூலமும் அறனும் முதன்மையின் இகந்த*
*காலமும் விசும்பும் காற்றொடு கனலும்*

<u>பல்வேறு திருவுருவத்துடன் விளங்கும் ஒரு முதல்வன்</u>

*தன்னுரு வுறழும் பாற்கடல் நாப்பண்*
*மின் அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த*
*கவைநா வருந்தலைக் காண்பின் சேக்கைத்*

துளவம் சூடிய அறிதுயி லோனும்
மறமிகு மலிஒலி மாறுஅடு தானையால்
திறன் இகந்து வரூஉம் அவருயி ரகற்றும்
விறல்மிகு வலிஒலி பொலிபு அகழ் புழுதியின்
நிறன் உழும் வளைவாய் நாஞ்சி லோனும்
நானிலம் துளக்கு அற முழுமுதல் நாற்றிய
பொலம்புனை இதழ் அணி மணிமடற் பேர்அணி
இலங்கு ஒளி மருப்பின் களிறும் ஆகி
மூவுரு ஆகிய தலைபிரி ஒருவனை!

<u>திருமாலை புகழ்தலும் வணங்குதலும்</u>

படர்சிறைப் பல்நிறப் பாப்புப் பகையைக்
கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை
ஏவல்இன் முதுமொழி கூறும்
சேவல் ஓங்கு உயர்கொடிச் செல்வ! நல் புகழவை;
கார், மலர்ப் பூவை, கடலை, இருள், மணி
அவையைந்தும் உறழும் அணிகிளர் மேனியை;
வலம்புரி வாய்மொழி அதிர்புவான் முழக்குச்செல்
அவைநான்கும் உறழும் - அருள், செறல், வயின்மொழி;
முடிந்ததும் முடிவதும் முகிழ்ப்பதும் அவைமூன்றும்
கடந்து அவை அமைந்த கழலின் நிழலவை;
இருமை வினையும் இல, ஏத்தும் அவை
ஒருமை வினைமேவும் உள்ளத்தினை;
அடை இறந்து அவிழ்ந்த வள் இதழ்த் தாமரை
அடியுங் கையும் கண்ணும் வாயும்
தொடியு உந்தியும் தோள்அணி வலயமும்;
தாளுந் தோளும் எருத்தொடு பெரியை;
மார்பும் அல்குலும் மனத்தொடு பரியை;
கேள்வியும் அறிவும் அறத்தொடு நுண்ணியை;
வேள்வியும் மறனும் விருப்பொடு வெய்யை;
அறாஅ மைந்தின் செறாஅச் செங்கண்
செருமிகு திகிரிச் செல்வ! வெல்போர்
எரிநகை இடைஇடுபு இழைத்த நறுந்தார்ப்
புரிமலர்த் துழாய் மேவல் மார்பினோய்! -
அன்னை என நினைஇ நின்னடி தொழுதனெம்;
பல்மாண் அடுக்க இறைஞ்சினெம் வாழ்த்தினெம்
முன்னும் முன்னும் யாம் செய்தவப் பயத்தால்
இன்னும் இன்னும் எம் காமம் இதுவே.

பாடலின் திரண்ட பொழிப்பை இனி காண்போம். (தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் - 9

பசவர் அங்கவஸ்திரத்தில் இருந்த சில காசுகளை அப்பெண்ணின் கைகளில் திணித்து, "உடனடியாக உன் கணவனுக்கு மருந்து வாங்கிக்கொடு" என்றார். மற்றவர்களை பார்த்தும் பார்க்காதவாறு கிளம்பினார். அக்ரஹாரத்திற்கு வந்தபொழுதுதான் தான் செய்த காரியத்தின் தாக்கத்தை பசவர் உணர்ந்தார். அக்ரஹாரத்தில் வீட்டிற்கு வீடு பெண்களும் ஆண்களுமாய் திண்ணைகளில் நின்று கொண்டும், ஜன்னல் வழியாகவும் பசவர் தனது வீடு நோக்கி போவதை பார்த்தனர். வீட்டிற்குள் போனதும் போகாததுமாய் அக்காள் நாகம்மா, "என்ன காரியம் செய்தாய்? தெருவெல்லாம் உன் நண்பர்கள் ஏதேதோ சொல்கின்றனரே?" என்றாள். பசவர் தம் நண்பர்கள் தாம் சேரிக்குள் ஒரு வீட்டிற்குள் சென்று வந்ததை சொல்லி இருக்கின்றனர் என்று நாகம்மா பேசுவதை வைத்து ஊகித்து கொண்டார். பசவர், "நாகம்மா, நான் செய்ததில் தவறு ஒன்றும் இல்லை. இது மனிதாபிமானம். அவ்வளவுதான்" என்றார். கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு அமர்ந்தார்.

தந்தை மதிராஜர் கோபத்துடன் வந்து பசவரை நோக்கி, "என்ன காரியம் செய்து இருக்கிறாய் என்று உனக்கு புரிகிறதா?" என்றார். பசவரும் சளைக்காமல், அப்படி என்ன தவறு செய்து விட்டேன்? என்று கேட்டார். பசவர் வயது ஒத்த மற்றவரிடம் தெரியாமல் செய்கிறார்கள் என்று பேசலாம். பசவரோ ஆழ்ந்து அமைதியுடன் சிந்தித்து பேசவும் செயலாற்றவும் கூடியவர். அது மதிராஜருக்கு நன்கு தெரியும். ஆனாலும் அவர் மனது சாந்தி அடையவில்லை. தன் மனைவி மதலாம்பிகையிடம், "தெருவில் என்னால் தலை காட்ட முடியாத காரியம் இவன் செய்திருக்கிறான்" என்று சத்தம் போட்டார். இதற்கு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ! வேகவேகமாக பசவர் தன் ஆசிரியர் வீட்டை நோக்கி சென்றார்.

அந்த ஆசிரியர் பசவர் வருவதை தூரத்திலேயே பார்த்து, மற்ற பையன்களிடம், "சரி, சரி; ஏதோ நடந்து விட்டது. இளகிய மனம் படைத்தவன். அவனை சில பரிகாரம் செய்ய சொல்லி யாகம் நாளைக்கு செய்ய ஆரம்பிப்போம்" என்றார். ஆனால் பசவரை பார்த்த மாத்திரத்தில், பசவர் தான் செய்த காரியத்திற்கு வருந்தவே இல்லை என்று ஆசிரியருக்கு புரிந்தது.

ஆசிரியர், "பசவா! பெரிய மனுஷத்தனமான காரியம் செய்து இருக்கிறாய். இதற்கு என்ன பலன் தெரியுமா? என்றார். பசவர் மரியாதையுடன், "நான் செய்ததில் குற்றம் இல்லை. மனிதாபிமானம் பொருட்டுத்தான் செய்தேன்" என்றார்.

ஆசிரியர், "பசவா! நீ என்ன குலம் என்பதை மறந்தாயோ?" என்றார். மறுகணம் பசவர் பூணூலை அறுத்தெறிந்தார். "இது உயர்ந்தது என்பதும், வேதம் சத்தியம் என்பதும் எனக்கு தெரியும். இது இல்லாவிடினும் நான் வேதநெறியில் இருந்து பிறழாதவனாகத்தான் இருப்பேன். அந்த வேதம் தீண்டாமையை விதிப்பதாக என்னால் கற்பனை செய்ய முடியவில்லை" என்றார். தெளிவாக அவர் பேசியதை கேட்டு ஆசிரியர் முதற்கொண்டு எல்லோரும் ஆசரியப்பட்டனர். ஆனால் ஒருவராவது பசவரை பாராட்டி பேச முன்வரவில்லை. ஆசிரியர் மதிராஜரை பார்த்து, "உன் பிள்ளை துடுக்காகவே வளர்ந்தான். இளம் வயதில் களை எடுத்து இருக்க வேண்டும். இப்பொழுது இதற்கு என்ன விதிக்க வேண்டும் என்று உனக்கே தெரியும்" என்றார்.

மதிராஜர் தலை கவிழ்ந்தது. மகனை பிரஷ்டம் செய்ய வேண்டும் அல்லது அவர் குடும்பத்தை ஒதுக்கி வைப்பார்கள் என்று அக்ரஹார தலைவரான அவருக்கு தெரியும். அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பசவர் அவர் பிள்ளை. மேலும் தன் கண் போன்றவன். அவனை எப்படி விடுவது? நிலைமையோ ஆனால் கை மீறி போய் விட்டது. அவர் நிமிர்ந்து பசவரை பார்த்தார். அங்கே பசவரை காணவில்லை. பசவர் வாழ்வில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருந்தது. (தொடரும்)

"மதுரமுரளி" சந்தா
5 ஆண்டு – ரூ 600
3ஆண்டு – ரூ 360
1 ஆண்டு – ரூ 120
For Details:
**+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:
Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai -83

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | நவம்பர் 10, 24 டிசம்பர் 9 |
| நவம்பர் 13 | ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரம் |
| நவம்பர் 24 | கொளத்தூர் ராகவாஸ்ரமம் நாமப்ரதிஷ்டை |
| நவம்பர் 25 | ஆம்பூர் சத்சங்கம் |
| நவம்பர் 30 | மணிமங்கலம் சிவன் கோவில் கும்பாபிஷேகம் |
| டிசம்பர் 1 | தஞ்சாவூர் நவநீதகிருஷ்ணன் கோவில் உபன்யாசம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.